சத்தியவேத பாதுகாவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 3?0
REGISTERED AT THE CEYLON G.P.O. AS A NEWSPAPER

89-ம் புத். ║ யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு ஐப்பசி மீ 24-ந் திகதி சனிக்கிழமை — பிரதமம் 15 ║ 42-ம் இல.

ஞானோபதேச நடுநிலையம்,
மேற்றிராசன இல்லம், யாழ்ப்பாணம்.

**ஞானோபதேச கருத்தரங்கு**

● **முல்லைத்தீவு**

நிகழிடம்: **மத்திய கல்லூரி**
நாள்: **7-11-64 சனிக்கிழமை**
நேரம்: **காலை 8-45 மணி**

* * *

● **ஊர்காவற்றுறை**

நிகழிடம்: **சென் அன்ரனிஸ் கல்லூரி.**
நாள்: **15-11-64 ஞாயிறுவாரம்.**
காலம்: **8-45 மணி.**

**குறிப்பு:** மாரிகாலமாயிருப்பதால், போக்குவரத்துக் கஷ்டங்கள் ஏற்படலாம். எனவே, நேரகாலத்தோடு அதற்கான ஒழுங்குகளைச்செய்து, கருத்தரங்கின் ஆரம்பத்திலேயே பங்குபெறுதல் விரும்பத்தக்கது.

நிர்வாகி.

● உலகத்தில் மகிழ்ச்சி ● சரித்திரத்தில் புரட்சி

## இந்தியா காணப்போகும் இறைவனின் பிரதிநிதி

# காத்திருக்கும் கண்கள்

### இரண்டு அல்ல; இந்தியாவின் கண்கள் மாத்திரம் அல்ல; இறைவன் மக்கள் எல்லோருடைய கண்களும் … … …



… வட்டமிடப்போகின்றன பம்பாய் நகரை நோக்கி. **அப்பத்தின் வடிவிலே மறைந்துவாழும் அன்பின் இறைவன் அங்கு அரசாளுவார்.** அவருடைய பிரதிநிதி பரிசுத்ததந்தை சின்னப்பரும் அந்தஇடத்தைத் தரிசிப்பார் — சற்பிரசாத மகாநாட்டின் பொழுது.

சென்ற ஞாயிறு உகண்டா வேதசாட்சிகளுக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டிய சடங்கின்பொழுது பரிசுத்த தந்தை 6-ம் சின்னப்பர், பம்பாய் நகரத்தில் கார்த்திகை 28-ந்உ தொடக்கம் மார்கழி 6-ந் திகதி மட்டும் நடைபெறவிருக்கும் மகாநாட்டிற்குத் தாம் வருவதற்குத் தீர்மானித்துவிட்டதாகத் தெரிவித்தார். இந்தத் தீர்மானம் புதுமையை விரும்பியோ, அல்லது வேறு நாடுகளுக்குப் போகவேண்டும் என்ற ஆசையினாலோ எடுக்கப்படவில்லை.

கிறிஸ்துவுக்குச் சாட்சியாக — கிறிஸ்துவின் அன்பை, அருளை உலகிற்கு எடுத்துக்காட்ட — எந்தநாடும், எந்தச் சமுதாயமும், எந்தக் கலாசாரமும் கத்தோலிக்க மதத்திற்குப் புறம்பானது அல்ல என்பதை நிரூபிப்பதற்கு — இவைகள்தான் பாப்பரசரை இந்தியாவிற்கு வரவழைக்கும் காரணங்கள்.

## எதிரொலி — அனைத்துலகிலும்

**இந்தியா:** இருட்டிலே சுடர்விடும் தெய்வீக ஒளியாக இருக்கிறது பாப்பரசருடைய வருகை என்று இந்திய அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார். சீன அணுக்குண்டு வெடித்த செய்தியைக்கேட்டுத் திகிலடைந்த இந்திய மக்கள், இந்த நற்செய்தியை ஆவலுடன் வரவேற்கிறார்கள்.

**இத்தாலி:** இங்குள்ள செய்தித்தாள்கள், பாப்பரசருடைய தீர்மானத்தை மனமார வரவேற்கின்றன.

**அமெரிக்கா:** இதுதான் ஆறுவது சின்னப்பரின் ஆட்சிக்காலத்தின் உண்மைத் தொடக்கம் எனச் செய்தித்தாள்கள் கருத்துத் தெரிவிக்கின்றன.

(வத்திக்கான் வானொலிச் செய்தி)

## அன்று உயிர் கொடுத்தார் … இன்று

சென்ற வேதபோதக ஞாயிறு ஆபிரிக்காக் கண்டத்திற்கு முக்கிய சரித்திரத்துவம் வாய்ந்த நாள். தங்களுடைய சமயத்துக்காக உயிரைக்கொடுத்த 22ஆபிரிக்க கத்தோலிக்க மக்களுக்கு உரோமையில் அர்ச்சியசிட்டபட்டம் கொடுக்கப்பட்டது.

(விபரம் 6-ம் பக்கம் பார்க்க)

## வெடியாம்!

— மாஸ்கோ

மாஸ்கோவிலுள்ள அர்ச். பேதுரு பாவிலு ஆலயத்தைப் பீரங்கியால் தகர்த்தெறிந்து விட்டார்கள் அரசாங்க அதிகாரிகள். அந்தப் பங்கிற்குச் சேர்ந்த கிறிஸ்தவமக்கள் தங்களுக்குச் சட்டம் வழங்கும் சமயசுதந்திரம் பறிபட்டிருக்கின்றது என்று கடுமையாக ஆட்சேபித்திருக்கிறார்கள்.

## இருட்டு வீடா? இரும்புத் திரையா?

செக்கோசிலவாக்கியாவில் றட்வனேவ் கிராமத்தில் தேசியமயமானமனையொன்றில் கடுங்காவலாளர்கள்மத்தியில் "வனவாசம்" செய்கிறார் மகா. வந்தனைக்குரிய பெரான் — செக்கோசிலவாக்கியாவின் அதிமேற்றிராணியார். 1949-ம் ஆ. சற்பிரசாதத்திருநாள் அன்று செய்த பிரசங்கத்திற்குப் பின் அதேதினத்தில் கைதியானார்: இன்னும் தடுப்புக்காவலிலேயே இருக்கிறார். வத்திக்கான் பொதுச் சங்கத்திற்கு அழைப்பிதழ் பெற்றார். "செக்கோசிலவாக்கிய சர்க்கார் எனக்கு "விசா" தரமறுத்துவிட்டார்கள்" என்று கூறினார்.

சுவர்களுக்குப்பின்னால் தன் நேரத்தை தியானத்திலும், அர்ச். அக்னேஸ் அம்மாளைப்பற்றிய புத்தகமொன்று எழுதுவதிலும் கழித்துவருகிறாராம்.

"காவலன்" புதுப்புது அம்சங்களைத் தாங்கிவர இருக்கின்றான்.



வாசகர்களே! உங்கள் கருத்துக்கள் விருப்பங்கள் **எவை?**

—ஆசிரியர்.

## சுதந்திரம்!

அதற்குப் பயப்படவேண்டாம் என்கிறார் பாப்பரசர் — ஸ்பெயின் கருதினால்ஒருவருக்கு ஸ்பெயினின் "யா" என்ற கத்தோலிக்க பத்திரிகை இந்தச் செய்தியைத் தெரிவிக்கின்றது. "ஸ்பெயின் மக்கள் என்னுடன் இருக்கட்டும். அவர்கள் மதச்சுதந்திரத்திற்குப் பயப்பட வேண்டியதில்லை" என்று கூறினார் பாப்பரசர்.

# இது கொலை!

## குழந்தைக்கும் உரிமை உண்டு

"ஒரு தாயின் வயிற்றில் ஜனித்திருக்கும் ஒரு பிள்ளையினால் அத்தாயின் உயிருக்கு ஆபத்திருக்குமென்று வைத்தியர்கள் அப்பிள்ளையின் உயிருக்கு அறிந்துகொண்டும் வினையம் செய்வது பெரும் பாவமாகுமென 12-ம்பத்திநாத பாப்பரசர் திட்டவட்டமாகக் கூறியதில் யாவரும் பிழைகூறுவதற்கு ஒரு தகுந்த நியாயமும் இல்லை" என 6-வது சின்னப் பபாப்பரசர் ஒரு பிரித்தானிய வைத்திய கோஷ்டிக்குப் பேட்டியளிக்கையில் கூறினார். ஆங்கிலத்தில்பேசிய பாப்பரசர், "சீவிக்கிறதற்கு அப்பிள்ளைக்கு உரிமையுண்டு. அவ்வுயிர் எந்நிலையிலிருப்பினும் அதைத் தப்பவைக்கப் பார்ப்பதொழிய அதை அழித்துவிட முயற்சிசெய்ய ஒருவருக்கும் உரிமையில்லை" என்றார் பரிசுத்த தந்தை.

## வெட்கம்!

"உண்மை நிலையை அறிவாராகில் கத்தோலிக்கர் வெட்கப்படுவதற்குரிய ஒரு கருமம் உண்டு. அது அவர்களிடை வேதாகம வாசினை மிகமிகக் குறைவாக இருப்பதே. இதை நாம் நிவிர்த்தி செய்யவேண்டும். பிரித்தானியாவினதும், பிறநாடுகளினதும் விபிலியசங்கம்செய்துவரும் தொண்டுபோன்ற ஒன்று கத்தோலிக்கரிடையில் இல்லாதிருப்பது நமக்கு மிகவருத்தத்தைக் கொடுக்கின்றது. இத்தகைய சர்வதேச கத்தோலிக்க இயக்கம் தாமதமின்றி நாம் தொடங்கவேண்டும்." இவ்வாறு யூகோசிலவியா மேற்றிராணிமாரில் ஒருவராகிய செக்காடா ஆண்டகையவர்கள் சங்கத்தில் அண்மையில் கூறியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**ஐப்பசி மாதம்—1964.**

| | | | |
|---|---|---|---|
| 25 | ஞா. | பெந்தக்கோஸ்துவுக்குப் பின்வரும் 23-ம் ஞாயிறு கிறிஸ்துராசா திருநாள். | [வெ] |
| 26 | தி. | காலதினம் | [ப] |
| 27 | செ. | அர்ச். வின்சென்ற் | [ப] |
| 28 | பு. | அர்ச் சீமோனும், யூதாவும் | [சி] |
| 29 | வி. | காலதினம் | [ப] |
| 30 | வெ. | காலதினம் | [ப] |
| 31 | ச. | மரியாயின் சனி | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

**1964-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24-ந் திகதி**


## பாக்கியம் பெற்ற பாரதம்

நமது பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர் சென்ற வேத போதக ஞாயிறுதினம் உலகமக்கள் அனைவருக்கும் மாபெரும் நற்செய்தியொன்றைத் தெரிவித்தார். பாரதநாட்டில் பம்பாய் நகரத்தில் நடக்கவிருக்கும் அனைத்துலக சற்பிரசாத மகாநாட்டிற்குத் தாம்வருவதாக மகிழ்ச்சியோடு அறிவித்தார். அனைத்துலகத்திலும் ஆரவாரப் பரபரப்பு. சகலரும் இந்த நற்செய்தியை வாழ்த்தி வரவேற்றனர். ஈழம் தன் அயல்நாடு பெறப்போகும் பாக்கியத்தை நினைத்து மகிழ்கின்றது.

சரித்திரத்தில் புரட்சிகரமான நற்செய்தி இது காலாதிகாலமாக பாரதத்தில் பாதம் வைக்கவில்லை பாப்பரசர்கள். இதுதான் முதன்முறையாக மேலைநாட்டின் எல்லைகடந்து, பாரம்பரிய, சம்பிரதாய மதில்களை இடித்து இந்தியாவுக்கு விஜயம் செய்கிறார்.

ஆதியில் அர்ச். தொம்மை அப்போஸ்தலர் கிறீஸ்துவ விசுவாசத்தை இந்தியாவுக்குக் கொண்டுவந்தார். வேதசாட்சியாக உயிர் துறந்தார். அர்ச். சவேரியார் வேதபோதக வேலையை அயராது செய்துவந்தார். நூற்றுக்கணக்கான ஐரோப்பிய வேதபோதக குருக்கள் இந்தியாவில் விசுவாசத்தை வளர்த்தார்கள்.

பாப்பானவர் பாரதத்திற்கு வருவது ஓர் உன்னத சந்திப்பு. மேலைத்தேயநாடும், கீழைத்தேயநாடும் திவ்விய முறையில் சந்திப்பது. இந்திய சித்தாந்தம் தெய்வப்பண்புள்ளது. தெய்வத் துடிப்புடையது. பாரதத்தின் கலை கலாசாரம் யாவும் கடவுள் சம்பந்தமானது. ஆகவே, இறைவனின் பிரதிநிதி பாப்பரசர் பாரதத்திற்கு வருவது மிகவும் வரவேற்கத்தக்கது.

பாரதம் இறைவனோடு சம்பந்தமான எதையும் ஆசாரம் பண்ணுகின்றது. கைகூப்பி ஆராதிக்கின்றது. கௌரவிக்கின்றது. உச்சிமேல் வைத்து மெச்சுகின்றது. இந்தியாவின் தந்தை காந்திஜி "தெய்வப்பண்பில்லாத மனிதனுக்கு இந்தியாவில் இடமில்லை" என்று கூறியது எவ்வளவு தூரம் பாரதத்தில் தெய்வப்பண்புண்டென்பதை எடுத்துக் காட்டுகின்றது.

தெய்வத்தோடு சம்பந்தமான எந்த மனிதனையும் இந்தியா வரவேற்கின்றது. முத்திசெய்கின்றது. பரமனின் பிரதிநிதியானபாப்பரசரை வரவழைத்தது நவஇந்தியாவின் சிற்பி—நேருஜியே. இந்தியர்களின் தெய்வத் துடிப்பினை நன்கறிந்தே பாப்பரசரை பாரதத்திற்கு வரும்படி இந்தியமக்கள் சார்பில் விண்ணப்பித்தார். இந்த விண்ணப்பத்தைப் பாப்பரசர் ஏற்பாரோ என்ற கேள்விக்குறி வளர்ந்தது. இப்போ அந்தக் கேள்விக்குறிகள் அழிந்தன.

தெய்வப் பண்புநிறைந்த பாரதத்தை பரமனின் பிரதிநிதி முத்திசெய்தே ஆகவேண்டும். தெய்வப்பண்புள்ள நாடு சமாதானத்தையே நாடும். பாரதம் சமாதானச் சங்கையே இடையறு ஊதுகிறது. அனைத்துலக சமாதானத் தூதுவாகிய பாப்பரசர் இதோ! பாரதம்வந்து சமாதானச் சங்கு முழங்கப் போகின்றார். வல்லரசுகள் மக்களை சர்வநாசம் செய்யும் கெடுபிடிக் கருவிகளை பிரங்கிக்கலாம். சமாதானம் விரும்பும் பாரதமும், சமாதானத்தின் சம்மனசான பாப்பரசரும் ஊதப்போகும் சமாதானச் சங்கு எல்லாவல்ல இறைவனின் எக்காளமே. இந்தச் சந்திப்பு, இந்த திவ்விய முத்தம் தரணிமீட்கும்.

"உலகம் கொடாத சமாதானம்" கொடுப்பவரின் பிரதிநிதி தெய்வப்பண்பு கரைபுரண்டோடும் பாரதத்தை முத்தமிடுவார். பாரதமே! உன்னோடு அனைத்துலகமும் அன்பிலும், சமாதானத்திலும் அகமகிழட்டும்.

வாழ்க பாரதம்! வாழ்க பாப்பரசர்!

**அன்பினல் உலகை ஆட்கொண்டு அறநெறியைக் காண்பித்து உலக மக்களுக்கு வாழ் வழித்த வள்ளல்—கிறீஸ்து அரசர் திருநாள்**

**25-10-64**



● ஞாயிறு சிந்தனை

## கிறீஸ்து அரசரின் திருநாள்

பிலாத்து அவரை நோக்கி: "அப்படியானால் நீ இராசாவோ? என்றான். யேசுநாதர் மாறுத்தாரமாக: நான் இராசா என்று நீரே சொல்லுகிறீர்; நான் சத்தியத்திற்குச் சாட்சி சொல்லும்படியாகப் பிறந்தேன்; அதற்காகவே உலகத்துக்கு வந்தேன் என்றார்." — [சுவிசேஷம்]

சேவகர் யேசுவின் தலையில் முள்முடியை வைத்தனர். சிவப்புப் போர்வையால் போர்த்தினர். "யூதரின் இராசாவே, வாழ்க!" என்று கூறி, அவர்முன் கேலிக்கூத்தாடினர். அதன்பின் அவர் தமது சிலுவையைச் சுமந்தார்; கல்வாரியின் உச்சியை அடைந்தார். தமது குருதியெல்லாம் சிந்தி உயிர்விட்டார். கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார். ஆனால், மாட்சியோடு ஆட்சிபுரிய மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

"நான் பூமியினின்று உயர்த்தப்படுவேனாகில், எல்லாவற்றையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" (அரு. 12 : 32). இது கிறீஸ்துவின் உறுதிவாக்கு. அவர் இவ்வுலகத்தில் இருக்கும்பொழுதே யாவற்றையும் தம்மிடம் கவர்ந்து இழுக்கத் தொடங்கினார். மனிதர் யாவரும் அவருடைய பணிவுள்ள பிரசைகளாகும்வரை அவர் மக்களைத் தம்மிடம் கவர்ந்திழுத்துக் கொண்டேயிருப்பார்.

எமது ஞானஸ்நானத்துக்கு முன் நாம் அந்தகாரத்தின் அரசனாகிய அலகையின் அடிமைகளாக இருந்தோம். ஆனால், இப்பொழுது நாம் கிறீஸ்து அரசரின் உத்தம பிரசைகள். நாம் அவருடைய அன்பின் ஆட்சிக்கு உட்பட்டவர்கள்; அவருடைய அன்பின் அரசில் அங்கம் வகிக்கிறோம்.

இன்று நாம் எமது அன்பின் அரசருடைய திருநாளைக் கொண்டாடுகிறோம். இந்த மங்கல நாளிலே நாம் சிந்தித்துத் தெளிவு பெறவேண்டிய பிரச்சினை ஒன்றுண்டு—கிறீஸ்துநாதர் அரசர்க்கெல்லாம் அரசராயின், ஏன் இன்று அனைவரும் அவரை அவ்விதம் ஏற்றுச் சேவிக்கவில்லை? பேர்னனேஸ் எனும் அறிஞர் இவ்வினவிற்கு நல்ல விடையொன்று தருகிறார்:

"உலகின் இன்றைய நிலை கிறீஸ்தவர்களுக்கு ஒரு பெரும் அவமானம். நாத்திகர் அல்ல, கிறீஸ்தவர்களின் அலட்சிய மனப்பான்மையே இவ்வுலகின் பெருந் துயருக்கும், அதன் பரிதாப நிலைக்கும் காரணம். உலகத்தை அழிவின் பாதையில் செலுத்துபவர்கள் நாங்கள்தான்."

ஆம், கிறீஸ்துநாதரின் அரசு உலகெங்கும் பரவச்செய்வது ஒவ்வொரு கிறீஸ்தவனுடையவும் கடமை என்பதைப் பலர் மறந்துவிடுகின்றனர். துறவிகளுக்கும், கத்தோலிக்க சேவா சங்கங்களிற் சேர்ந்த சில இல்லறவாசிகளுக்கும் மாத்திரம் இக்கடமை உண்டெனச் சிலர் தவறாகக் கருதுகின்றனர். அதுமட்டுமன்றிச் சிலர் தமது அலட்சிய மனப்பான்மையாலும், துர்மாதிரிகையான வாழ்க்கையாலும் கிறீஸ்துவின் அரசு பரவுவதற்கு முட்டுக்கட்டைகளாக விளங்குகின்றனர்.

நாம் கிறீஸ்துவின் பிரமாணிக்கமுள்ள பிரசைகளாக விளங்குகிறோமா? அவருடைய அன்பின் அரசு பரவுவதற்கு நம்மால் இயன்றளவு ஊழியம் செய்கிறோமா? இவ்வாரம் நாம் சிந்திக்கவேண்டிய விஷயம் இதுதான்.

— இ. மரியவளன்



## தாயின் குரல்

செபமாலைப் பக்தர்களே! நீங்கள் இலட்சாதி இலட்சம் முறை "இப்பொழுதும், எங்கள் மரண நேரத்திலும்" என்று கெஞ்சி மன்றாடுகிறீர்கள்.

இதோ, "இப்பொழுது" நம் மேற்றிராசனத்திற்கும், அகில இலங்கைக்கும் ஓர் அவசர தேவை, செபமாலைத்தாசர் வளரவேண்டும். செபத்தின் மூலமே உலகம் உய்யும். செபமாலைத்தாயின் மாதத்தில் தவிக்கும் நம் தாய்க்குப் பதில் கொடுங்கள்! செபமாலைப்பக்தர் சிலரைத் தன் செபமாலைத் தாசர் சபைக்கு அழைக்கின்றார் — பதில் கொடுங்கள்!!

சபையில் சேர விரும்புவோர் பின்வரும் முகவரிகளுக்கு எழுதலாம்.

அதிபர்,
செபமாலைத் தாசர் சபை,
[illegible]

அல்லது

"அமலிவனம்",
அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பார்ந்த தம்பி, தங்கையர்களே உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்!

ஒரு முறை ஓர் அரசிளங்குமாரன் கொலைஞன் ஒருவனுற் படுகாயப்பட்டான். அவனுடைய மரணப்படுக்கையண்டை தகப்பனுகிய இராசாவந்து, தான் ஏதாவது ஓர் ஊழியம் அவனுக்குச் செய்யக்கூடுமா என்று மகனைக் கேட்டான். "என் பிதாவே, என்னைப் படுகாயப்படுத்தி மரணத்துக்கு ஏதுவாக்கினவனுக்கு உயிர்ப்பிச்சை கொடும்" என்று விடையளித்தான். இதைக் கேட்ட இராசா மிகவும் மன அருட்சியும் சோகமுங் கொண்டார். கொண்டு கொலைக்காரனைச் சாகப்போகிற தன் மகனண்டை கொண்டுவரும்படி கட்டளையிட்டான். இராசகுமாரனை வளர்த்தியிருந்த அறையுள் அக்கொலைஞன் புகுந்ததும், "நீ கொல்ல விரும்பிய ஆளின்முன் இதோ நிற்கின்ருய்; உனது அக்கிரமத்துக்கு மரணதண்டனையே நீதி. ஆனுல், நீ கொலைசெய்ய விரும்பினவரே உனக்கு உயிர்ப்பிச்சை கொடுக்கும்படி கேட்கிருர். கேட்கிறபடியால் உன்னை மன்னித்து விடுகிறேன். இப்போது எனது இந்த இராசா குமாரன் உயிர்பிழைத்தால் நீ என்ன செய்வாய்?" என்று கொலைஞனை இராசா கேட்டார். அந்தக் கல்நெஞ்சனுன கொலைக்காரனே, "நான் இரண்டாம் விசையும் அவரைக் கொல்லுவேன்" என்ருன். சாவான பாவத்தைச் செய்பவனும் சொல்வது இதுதான். இப்படி அவன் வாயாலே சொல்லுகிறதில்லை. சாவான பாவத்தைச் செய்யும்பொழுது அவனுடைய இருதயத்தில் நடக்கும் செயல் இதுதான். தனது கிரிகையினுல் சொல்லும் விடை இதுவே. தமது மரணத்தினுல் நித்திய மரணத்திலிருந்து பாதுகாத்த தேவசுதனை—எனது ஆத்துமத்துக்காகத் தமது ஆத்துமத்தைக் கொடுத்த தயாபர யேசுவை—பாவியானவன் மீண்டும் சிலுவையில் அறைந்து கொல்ல ஆயத்தமாயிருக்கிருன். ஆ! இது எத்துணை கேடுகெட்ட துரோகம்.

—அண்ணு.

## அன்னையின் அன்பளிப்பு—2

முதலாம் பரிசு
9 அங்குல உயரமான
திருஇருதய யேசுநாதர் சுரூபம்.

இன்னும் இரண்டு பரிசில்களும் உள்ளன.

* * *

முடிவு திகதி: மார்கழி மாதம் 7-ந் உ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 இ | 2 | | | 3 | |
| 4 | | ■ | 5 | | மை |
| 6 | | 7 | ■ | ■ | 8 |
| ன | ■ | | 9 உ | 10 | |
| 11 | ■ | 12 | | | ■ |
| ■ | 13 | | | 14 | |

இடமிருந்து வலம்:

1. யேசுநாதர் தேர்ந்தெடுத்த முதல் பாப்பரசர் இவரே.
3. பர்மா பூரண சுதந்திரம் அடையவில்லையோ.
4. கறையல்லவா அதுதான்மாறியிருக்கிறது.
5. — — —யில் பம்பாயில் சற்பிரசாத மகாநாடு நடைபெறவிருக்கிறது.
6. நல்ல கத்தோலிக்கர்கள் இந்த வம்பு தும்புகளுக்குப் போகக்கூடாது.
10. ஒவ்வொரு பங்கிலும் ஒவ்வொரு சற்பிரசாத — இருப்பது மிக நன்று.
11. ஆடியின் அடி.
12. இது நம்மை வாட்டினுலும் இறைவனை நாம் மறக்கக்கூடாது.
13. மெழுகு — கொளுத்தப்படவில்லையோ, நான்கு எழுத்துக்கள்தான்.
14. திசை காட்டிக்கொண்டிருக்கிறதே.

மேலிருந்து கீழ்:

1. இறந்துவிட்டால் இவனடி தானே.
2. கோவிலில் பாடும்போதும் இது பிழைக்கக்கூடாது.
3. இசைக்கு இப்படியும் கூறுவர்.
7. பழங்கால இவர்கள் பாடிய செய்யுட்கள் தமிழர்களின் தனிச்சொத்தல்லவா.
8. "எம் கடன் .....செய்து கிடப்பதே."
9. மனதை உறுத்திக்கொண்டிருக்கக் கூடாதென்று 'தி' மறைந்து விட்டதோ.
10. நம்உள்ளத்தில் என்றும் நிலவ வேண்டும்.
11. பெண்களை அழைக்கும்போது சிலர் இந்த 'டி' யையும் சேர்த்துக் கொள்வார்கள்.
12. வர்ணம் தீட்டி முடியவில்லையோ.

* * *

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.
பிரதிபண்ணி ஒருவர்
எத்தனை கூப்பன்களும் அனுப்பலாம்

* * *

முகவரி: திரு. ஏ. பி. வி. கோமஸ்,
"ஜெயமேரி,"
எட்டியாந்தோட்டை.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 31-ந் தேதி சனிக்கிழமை பி. ப. 4மணியளவில் வழமைப்பிரகாரம் சஞ்சுசையப்பர் சிற்ருலயத்தில் நடைபெறும்.

A. S. FRANCIS of MARY,
சபைக் கர்த்தருக்காக.

யாழ்ப்பாணம்,
23-9-64.

ஆகம அரங்கம் 2

# குப்பைமேட்டிலே குபேரன்

...ட்டடுக்கு மாளிகை வானைமுட்டி நின்...து. தொட்டது எதற்கும்வேலையாட்...ர். மந்தைகளைப் பராமரிக்க வேலையா...கள் வேறு. பிள்ளைச் செல்வத்திற...ம் குறைவில்லை. உண்மையிலே அந்த ...ளிகைக்குரியவன் ஒரு குபேரன்தான். தித்திக்கும் திராட்சப்பழங்களுடைய தோட்டம். செந்நிற நெல்லுடைய வயல்கள். கொழுமையான கோதுமை வயல்கள். இவற்றிலிருந்து வருவாய் வந்துகொண்டேயிருந்தது. செல்வம் கண்டு செருக்கடையவில்லை; பெரும் பொருள்கண்டு பெருமைப்படவில்லை குபேரன். குபேரனின் குணங்கண்டு கொதித்தெழுந்தான் சாத்தான். தனது சோதனையால் குபேரனை (யோபுவை) வென்று சாதனை நிலைநாட்ட முயற்சி செய்தான். ஆண்டவனிடம்சென்று அனுமதிபெற்ருன். சோதனை ஆரம்பமானது. பெரும்பொருள் கரைந்தது. கள்வர்கூட்டம் களஞ்சிய சாலைகளைக் கன்னமிட்டனர். மந்தைகள் நோயினுல் மாண்டு மடிந்தன. வயல்களில் அருவிகள் கருகின, திராட்சக்கொடிகள் வாடி வதங்கின, மக்கள் விருந்துண்ணுகையில் வீட்டுச் சுவர்விழுந்ததால் மாண்டு மடிந்தனர். இத்தனையும் கண்டு குபேரன் கூறியது: 'கர்த்தர் தந்தார்; கர்த்தர் எடுத்துக்கொண்டார்; அவர் நாமம் அர்ச்சிக்கப்படுவதாக."

சாதனை நிலைநாட்ட விரும்பிய சாத்தானுக்கு ஒரு சவுக்கடி. மீண்டும் ஆண்டவனிடம் சென்ருன். குபேரனின் சரீரத்தைத் தீண்ட அனுமதி பெற்ருன். ஆனுல் உயிரை அல்ல குஷ்டம் பீடித்தது குபேரனை. நண்பர் நகைத்தனர். உற்ருர் வெறுத்தனர். மனைவியும் கைவிட்டாள். குப்பைமேட்டைத் தஞ்சமெனக் கொண்டார் குபேரன். சிறு ஓட்டுத்துண்டு கொண்டு உடம்பை பிருண்டினுர். "இன்னும் உனக்கு அறிவு வரவில்லையா? உமது தேவன் இவற்றை உமக்கு விட்டு விளையாட்டுப் பண்ணுகிருர். ஆனுல் நீரோ அவரையே மீண்டும் மீண்டும் வாழ்த்துகின்றீர்" மனைவி பரிகாசம் செய்தாள். குபேரன் கூறினுர்: "கர்த்தர் கையால் நன்மைகள் பெற்ருேம்; ஏன் அவர்கையால் தீமைகளைப் பெறக்கூடாது?"

சாத்தான் நிலைநாட்ட விரும்பிய சாதனை முறியடிக்கப்பட்டது. கர்த்தர் கருணைகூர்ந்தார். குபேரனின் குஷ்டம் குணமானது. மாண்டமந்தைகள் மீண்டன, செல்வமும் முன்போலக் கரைபுரண்டு திரண்டது. மக்களும், மாளிகையும் மீண்டன. முன்போலச் செல்வமும் சீரும் சிறப்பும்பெற்று பல்லாண்டு வாழ்ந்தார் குபேரன் யோபு. இன்பமும் துன்பமும் இறைவனுலேயே வருகின்றன. நாம் அவற்றை நல்மனதுடன் ஏற்று நடந்தாற்ருன் நற்கதியடைவோம்.

இ. பேர்ணுட்


எல்லோரும் விரும்பிச்செல்லும் விருந்தினர் மாளிகை

"பாம் கோட்"

பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

இங்கே உள்ள வசதிகளிற் சில:

● தாராளமான பெரிய அறைகள்
● மின்விசிறிகள் ● றேடியோ சங்கீத உபகரணங்கள்
● சுகதளபாடங்கள்
அறை ஒவ்வொன்றுடனும்
● ஸ்நான சுத்திகரத் தனிஅமைப்புகள்
● உணவுஅருந்த உல்காசமான திறந்த வெளிஇடம்
● மாடி நந்தவனம் ● பூந்தோட்டமுற்றம்
சிறு பிள்ளைகளுக்கு உகந்த
● விளையாட்டு அறைகள் ● சிறு மிருகசாலை
● மோட்டார்வாகனங்கட்கு 'கருஜ்'வசதி
உல்லாசப் பிரயாணிகளுக்கு உதவியான
● வழிகாட்டிகள் ● போக்குவரவு வசதிகள்
மேல்நாட்டு, கீழ்நாட்டு முறைகளில் தயாரிக்கப்படும்
● திறமையான உணவு

| | தனிஆன் | இருவர் | |
|---|---|---|---|
| 1-ம் வகுப்பு அறை | 10 ரூபா | 18 ரூபா | நாள் ஒன்றுக்கு |
| 2-ம் வகுப்பு அறை | 7 ரூபா 50 சதம் | 15 ரூபா | |

கிரமமாய் வருபவர்களுக்கும், வர்த்தக பிரயாணிகளுக்கும் விசேஷ சலுகைகள் காட்டப்படும்.

விவாகவரவேற்பு, பிரியாவிடை முதலிய வைபவங்களுக்கு உகந்த இடம் இது.

"பாம் கோட்" மண்டபம், வெளிமுற்றம் கொண்டாட்டங்களுக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மறவாதீர்கள்:

விடுதி வசதிகளுக்கும், கொண்டாட்டங்களுக்கும் யாழ்ப்பாணத்தில் கீர்த்திவாய்ந்த இடம்

"பாம் கோட்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

"அன்பு என்ற சொல்லிலே இனிமையிருக்கிறது. இன்பம் இருக்கின்றது. வல்லமையிருக்கிறது. தாய்ப் பசுவைத் தவறவிட்டுக் கன்று கதறித் திரிகின்றது. தாயைத் தவறவிட்டுக் குழந்தை அம்மாவென்று அலறுகின்றது. இப்படியாக இவ்வுலகத்தில் நடமாடும் உயிரினங்களைப் படைத்த இறைவன் அவைகளை "அன்பு" என்னும் அபூர்வ சக்தியால் இணைத்து வைத்திருக்கிறார். பெரியதோர் கட்டடமொன்றிலே இருக்கும் ஆயிரக்கணக்கான கற்துண்டுகள் எப்படி சீமெந்தினால் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே ஒரு குடும்பத்திலோ, அன்றேல் ஒரு சமுதாயத்திலோ, மக்கள் அன்பு என்ற இந்த இன்பமான காந்தத்தால் இணைக்கப்பட்டிருக்கிறார்கள்.

"உன்னைப்போல் உன் அயலானையும் நேசி" என்று போதித்தார் கிறீஸ்து— வெறுப்பை வெறுப்பினால் அழித்துவிட முடியாது. வெறுப்பை அன்பினால் அழிக்கலாம் என்று போதித்தார் புத்தர். ஆனால், இந்தப் போதனைகளுக்குப் பின்னும் உலகம் அமைதியின்றி, ஒற்றுமையின்றிக் காணப்படுவதற்குக் காரணம் என்ன? இதே கேள்வி சரித்திர ஓட்டத்தின் ஒவ்வொரு முடக்கிலும் கேட்கப்பட்டு வந்திருக்கிறது. ஒற்றுமையை ஆக்கி வைக்கும் தொழிலிலே தம் உயிரைப் பணயம் வைத்துச் சேவை செய்த மகாத்மாக்களின் வரிசை இன்றும் முடிவின்றித் தொடர்ந்து செல்கின்றது. அப்படியிருந்தும் குலைந்த குடும்பங்கள் எத்தனை! அன்பு என்னும் விளக்கு அணைந்து, சந்தேகம் என்னும் இருளிலே குருட்டாட்டம் போடும் குடும்பங்கள் எத்தனை! இவற்றிற்கெல்லாம் 'அன்பு'தான் தகுந்த விடை என்று காலாகாலமாகப் பலர் பறைசாற்றியபோதும் உலகம் அருட்சியின்றி கொலை, கொள்ளை, சூது என்ற ஒரே நாதத்தைத் திரும்பித் திரும்பித் தட்டிக் கொண்டிருக்கிறது. விடை எங்கே என்று கேட்டால்—நேயர்களே! உங்கள் ஒவ்வொருவரையும் தாழ்மையுடனும், அங்கலாய்ப்புடனும், உளம்பூரித்த நம்பிக்கையுடனும் சுட்டிக் காட்டுகின்றேன். நீங்கள் தான் விடை. நீங்கள் ஒவ்வொருவரும் தான் விடை. யாரோ ஒருவர் செய்வார் என்ற நோக்கத்திலே நாம் கைகட்டியிருந்துவிட்டால் ஒன்றும் நடந்துவிடாது. நாம் ஒவ்வொருவரும் நமது அன்றாட வாழ்க்கையிலே தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் செயலிலே இறங்கவேண்டும். நமது சமுதாயத்திலே அன்பு வளருமானால், மனிதனை மனிதனாகக் கருதும் மனப்பான்மை தலையெடுக்குமானால், பிறனைச் சகோதரனாகக் கருதிவாழும் தெய்வீக உள்ளம் படைத்தவர்களாக நாம் ஒவ்வொருவரும் நடப்போமானால் நாம் அன்புக்குச் சாட்சி கூறுவோம்— எமது புனித வாழ்வின் நறுமணம் எம்மட்டிலே மாத்திரம் தங்கிவிடாது, காற்றுடன் கலந்து நாம் வாழும் சமுதாயம் முழுவதையும் நறுமணம் கமழச்செய்யும். சமுதாயம் என்ற சொல், தன் வயிறே பிரதானம் என்ற தன்னலக் கோளுடன் வாழும்மக்களின் கூட்டம் என்பதைக் குறிக்கவில்லை. ஆனால், ஒருவர்க்கொருவர் உதவிசெய்து ஒருவருடைய தேவையை இன்னொருவர் பூர்த்தி செய்து வாழும்மக்கள் கூட்டத்தையே குறிக்கின்றது. நானல்ல—நாம்.

அப்போஸ்தலர்கள் அன்றொரு நாள் கிறீஸ்துவை, தாம் எப்படி செபிக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு அன்புதான் பிரதானம் என்று போதித்த கிறீஸ்து பின்வருமாறு செபிக்க வேண்டும் என்று கற்பித்தார். "பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராட்சியம் வருக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பம் எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்போல் எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும். எங்களைச் சோதனையிலே பிரவேசிப்பியாதேயும் தின்மையிலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்'

தேவனைப் புகழும் பொழுதும் நாம் ஒன்றாக இருக்கிறோம் — எமது அன்றாட அப்பத்தைக் கேட்கும் பொழுதும் நாம் ஒன்றாக இருக்கிறோம்—எனவே அன்பினால் இணைக்கப்பட்ட நம் வாழ்க்கையிலேயும், நாம் 'நாம்'என்ற விரிந்த மனப்பான்மையுடையவர்களாக இருக்க வேண்டும்.

தேபொன்கலன்,

## அறிவித்தல்

### கண்டி மேற்றிராசனம்

இலங்கையின் மலைநாட்டுப் பகுதியில் உள்ள விசாரணைப் பங்குகளிலே குருமாராகத் தேவதொண்டு புரிய ஆசிக்கும் வாலிபர்கள் கீழ் காணப்படும் முகவரிக்கு விண்ணப்பம் செய்து கொள்ளவும்.

அதிபர்,
அர்ச். சூசையப்பர் குருமடம்,
பூரணவத்தை,
கண்டி.

## உங்கள் சந்தாவைச் செலுத்தி விட்டீர்களா ?

# மாலையின் மணிகளில் !........

### மோட்சானந்த காரணிக்கங்கள்

(செல்வி ரோஜா சாமுவேல்)




மாமறைப்பெரியோர்முன்உரைத்தபடி
மங்கள மகிமை சோபையுடன்
மாபரன் மரித்த மூன்றும் நாள்
மரித்தவ ரிடைநின் றுயிர்த்தருளி
மாபெரும் கவலையில் மிகஅழுந்தி
மறக்கொணுத் துயரில் நாட்கழித்த
மாதுன் முன் தரிசனம் தந்ததனுல்
மகிழ்வுடன் மகிமை யடைந்தீரே !

களிகூர்வீர்தாயே! களிகூர்வீர்!......



உயிர்த்தெழுந்தருளிய நாற்பதாம் நாள்
உத்தமர் பிதாவிடம் செல்வதற்காய்
"உலகெங்கும் சென்றே போதிப்பீர்" என
உவந்தே சீஷர்க்குப் பணிவிடுத்து
உவமையிலாத் தனி அழகுடனே
உயர்ந்தே மேகத்தினூடே செல்ல
உள்ளம் பூரிப்பால் நிறைந்திடவே
உன்னத மகிமை யடைந்தீரே !

களிகூர்வீர் தாயே! களிகூர்வீர்!




பரலோகம் சென்ற பத்தாம்நாள்
பரமன் தான்கூறிய வாக்கின்படி
பரம்பொருள் ஆவியை அனுப்பிடவே
பற்றிடும் அக்கினி நாக்குருவாய்
பரிந்தே வந்து பிரிந்திறங்கிப்
பரிசுத்த நேசத்தால் நிரப்பிடவே
பயமுற்ற சீஷரும் மனந்தெளியப்
பாங்குடன் மகிமையடைந்தீரே !

களிகூர்வீர் தாயே! களிகூர்வீர்!



மாநிலமீதில் மங்கையாய் உதித்து
மங்கள வார்த்தை கேட்டமுதல்
மாபெரும் ரட்சணிய வேலையதில்
மகிழ்வுடன் பங்கு பற்றியபின்
மைந்தன் மேல்கொண்ட பாசத்தால்
மரித்துயிரதனை நீக்கிவிட்டே
மறுபடி உயிர்த்தே எழுந்தருளி
மாதாவே! மகிமை யடைந்தீரே!

களிகூர்வீர் தாயே! களிகூர்வீர்!




பரிசுத்தமான உன் உடலுடனே
பக்தி நிறைந்தவுன் ஆத்துமமும்
பரலோகம் நோக்கிப் பறந்துசெல்ல
பரிசுத்த பரம திரித்துவந்தான்
பரிவுடன் உம்மை எதிர்கொண்டே
பரலோக பூலோக இராக்கினியாய்ப்
பாங்குடன் முடிசூட்டி யகமகிழப்
பேசொணு மகிமையடைந்தீரே.

களிகூர்வீர் தாயே! களிகூர்வீர்!

(முற்றும்)


அல்ஸ்ட்ரன்
மீன்பிடி வலைகள்




அல்ஸ்ட்ரன் மட்டுமே இவ்வனுகூலங்கள் அனைத்தையும் அளிக்கவல்லது.

CIC அல்ஸ்ட்ரனின் விசேஷத் தன்மைகளை மற்ற நார்களுடன் ஒத்திட்டுக் காட்டும் இலவசப் புத்தகம் ஒன்றை பெற இன்றே எமக்கு எழுதுக.

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ்(கொழும்பு)லிமிடெட்,
தபால் பெட்டி 352, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை . . .

மனிதன் ஓர் அரிய படைப்பு; ஓர் அற்புத அமைப்பு — அவன் ஒரு பொருள். கல்லும் ஒரு பொருள் தான். ஆனால், கல்லிடம் வாழ்வு இல்லை. மரத்திற்கு வாழ்வு உண்டு.



குத்துவிளக்கு

உணர்ச்சி இல்லை. மிருகங்களுக்கு உணர்ச்சி உண்டு; அறிவு இல்லை. அறிவு படைத்த மனிதன் இயற்கையின் தலைவன். அவனுடைய வாழ்விற்கு மாத்திரம் உணர்ச்சியுடன் உயர்வு உண்டு; அறிவுடன் அழகு உண்டு; ஆற்றலுடன் அதிகாரம் உண்டு. "அரிது அரிது, மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்று கூறியது உண்மைதான்.

இலட்சியத்தை அறிந்து வாழ்கின்றார்கள்.

மக்களுக்கு அன்பும் அறிவும் உள்ளபடியினால்தான் வாழ்க்கையை வாழ முடிகிறது. அப்படி என்றால் அந்த வாழ்வின் நோக்கம் என்ன? பணம் சேகரிப்பதா? பட்டங்கள் பெறுவதா? உலக இன்பத்தைத் தேடுவதா? ...... "இறைவன் அடி சேர்தல்" — "அறவாழி அந்தணன் (கடவுள்) தாள் சேரல்" — "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்தல்" இதுதான் வாழ்வின் நோக்கம் என்று வள்ளுவர் கூறுகின்றார். "கற்றதனால் ஆன பயன் என்கொல், வாலறிவன் (தூய அறிவு வடிவாகிய கடவுள்) நற்றாள் தொழா அர் எனின்" என்று அழுத்தம் திருத்தமாகத் திருவள்ளுவர் கேட்பதன் கருத்தும் அதேதான். மனித அறிவு, கல்வியைப் பெற்றுக்கொள்கிறது. அதே கல்வி, கல்வியைப் பெறும் அறிவைக் கடவுளுடைய பாதத்தில் சேராது விட்டால், அது கல்வியும் அல்ல, அறிவும் அல்ல என்பது அவருடைய கொள்கை. ஏன்? மக்களுடைய அறிவிற்கும், இன்பத்தின் நாட்டத்திற்கும் அளவு கிடையாது. அறிவின் ஒட்டத்திற்கு இலட்சியத்தை அளிக்க வல்லவர், இன்பத்தை நாடும் உள்ளத்திற்கு அதை அளிக்கவல்லவர் இறைவன் மாத்திரந்தான். வேறு எவரோ, எதுவுமோ அல்ல. காரணம் அவரே அறிவின் வடிவம் — அன்பின் உருவம்.

— சீ. மரியசேவியர் —

செய்வதற்கும், செய்யப்படுவதற்கும் வேறுபாடு உண்டு. அதே வேறுபாடு தான் வாழ்வதற்கும், வாழச் செய்யப்படுவதற்கும் உள்ளது. வாழ்க்கையை வாழும் பொழுது வாழ்வின் இலட்சியம், நோக்கம் என்ன என்று அறிந்து, அதன்படி வாழ்க்கை அமைகின்றது. வாழ்வின் இலட்சியம் ஒன்று இருந்தும், நோக்கம் இருந்தும், அது என்ன என்று தெரியாமல், அது நிறைவேற்றப்படுகின்றது, வாழ்க்கை வாழச் செய்யப்படும்பொழுது. மாரும், மலரும் மானும் மயிலும் தம் வாழ்வின் இலட்சியம் என்ன என்று தெரியாது, வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றுகின்றன. அவை ஒருவிதத்தில் வாழவில்லை. வாழச் செய்யப்படுகின்றன. மக்கள் மாத்திரம் தம் வாழ்வின் நோக்கத்தை,

இறைவனையே இலட்சியமாக நோக்கிய வாழ்வு வளமுள்ளது — குணமுள்ளது. அத்தகைய வாழ்க்கை,

## . . . வாழ்வதற்கே!

# பிரலாப மரணம்

— காவலூர்

அகிலஇலங்கையுமே திகில்கொள்ளும்படியாக அன்றுசனிக்கிழமை காலை மிரீகமத்துக்குச்சமீபமாய் நடந்தேறிய அதிபயங்கரமான புகையிரத விபத்திலே ஊர்காவற்றுறை உதய திசையைச்சேர்ந்த 63வயதுள்ள திருமதி எஸ். பி. இம்மனுவேலும், 22 வயதுடைய அவரின்புதல்வியான செல்வி அந்தோனியா இந்திரா இம்மனுவேலும் அந்தோ! உயிர்துறந்தார்களாமெனக் கிடைத்த அமங்கலசெய்தியானது காட்டாக்கினிபோல் பரந்தபோது காவலூரும், அதன் சுற்றுடலிலுள்ள கிராமங்களும் கவலையென்னும் கார்மேகத்தால் கவியப் பெற்றுச் சிந்தாகுலகாட்சி அளிக்கலாயிற்று.

அதிலும் தாம்நியமனம்பெற்றுவந்த சிறிதுகாலத்துள்ளேயே தமதுவேத போதகத்தாலும், தேவதொண்டுகளாலும் மக்களில்உள்ளங்களை வெகுவாக ஈர்ந்துகொண்டுள்ள நமது மேற்றிராசனக்கோவில் உதவிக்குரவர் வண. தோமஸ் செளந்தரநாயகம் சுவாமிகளின் அருமைத்தாயாரும், அன்புச் சகோதரியுமே விபத்துக்குள்ளாய் உயிர்துறந்த அவ்விருவருமென அறிய வந்ததும் ஆசனக்கோவில் விசாரணைப் பங்கிலும், அதன்சூழலிலும் வதிகின்ற மக்களிடையே பேரதிர்ச்சியும், பரபரப்பும், பெருந்துயரும் எழலாயின.

விபத்துநிகழ்ந்த இடத்திலிருந்து தாயும், மகளுமாகிய இருவரது பிரேதங்களும் ஊர்காவற்றுறைக்குக் கொண்டுவரப்பெற்றபோது அவைகளைச் சோகமேஉருவாய், கண்ணீரும் கம்பலையுமாக வரவேற்றுநின்ற சுற்றத்தவர், அன்பர்கள், அனுதாபிகளிடையே எழுந்த பெருமூச்சுகளும், பிரலாபங்களும் வர்ணிக்கும்தரமன்று. அதிலும் காலஞ்சென்ற செல்வி அந்தோனியா இந்திரா அண்மையிலேயே பி.ஏ. எனப்படும் கலாநிதிப்பட்ட பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்து இன்னும் சிலதினங்களிலே பட்ட அளிப்புவிழாவில் கலந்து பட்டம் பெற்றுவர ஆயத்தமாயிருந்தாரென அறியவந்தஎல்லவர்மனமுமே இரங்கிப் பரிதபித்துத் துடியாய்த் துடித்தது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நாற்பதின்மருக்குமேற்பட்ட குருப்பிரசாதிகளும், கன்னியாஸ்திரீகள் பலரும், ஊர்காவற்றுறை, கரம்பன், நாரந்தனை முதலாம் பலவிடங்களிலிருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்தும் காவலூரே இதுவரை கண்டிராதவிதமாகச் சனசமுத்திரம்போன்று வந்து குழுமியமக்களும் சமூகமாகப் பிரேத சேமவைபவம் ஆரம்பமாயிற்று.

இருவர்சடலங்களும் அழகியபேழைகளில் வைக்கப்பெற்று, அலங்காரபூமுடிகள் அணிசெய்துநிற்க, மாபெரும்ஊர்வலமாய் அர்ச். அந்தோனியார்கோவில் கொண்டுசென்று அந்திமதிருச்சடங்குகள் நிறைவேறிய பின்னர் சேமக்காலைகொண்டுசென்று, அவ்வமயம் காணப்பட்ட கண்ணுருவியான காட்சியாலே பல்லோரும் உள்ளம்கசிந்துருகிக் கண்ணீர்உகுத்து நிற்க நல்லடக்கம் செய்யப்படலாயின. தங்களுக்கு அருமைபெருமையான இருவரையும்இழந்து ஆற்றொணுத்துயருற்று வருந்தும் அனைவருக்கும் எமது அனுதாபமும் உரித்தாகுக!

R. I. P.

வாழ்வாங்கு வாழ...10

# தன்னடக்கம் தேவை, தரணியில் நாம் நீடுவாழ!

— ஏ. பி. வி. கோமஸ் —

நம் நெப்போலியனின்கீழ் வேலை செய்த ஒருநபரின் பெயர் பெர்சிக்னி. நல்ல மூளையுள்ளவர்தான். ஆனால், அவரிடம் பெரியதொரு குறையிருந்தது. அதுவே தன்னடக்கம் இன்மை — அதாவது கோபத்தை அடக்கிக்கொள்ள முடியாத தன்மை. ஆனாலும்அதனை எவ்வாற்றானும் மாற்றவேண்டும் என்ற மனங்கொண்டார் அவர்— ஆம்!

ஒருநாள் நண்பரொருவர் அவருடன் அளவளாவிக் கொண்டிருந்தார். பேச்சு சூடுபிடித்தது. பெர்சிக்னியின் வார்த்தைகளிலும் உஷ்ணம்கண்டது. ஆம், அவருக்கும் கோபம் வந்துவிட்டது. அந்நேரம்:

அவரின் செயலாளர் நுழைந்தார். ஒரு கடிதத்தை அவர்கையில் கொடுத்தார். அவரும் வாங்கிக்கொண்டார். பிரித்தார்; ஆனால், வாசிக்கவில்லை. கடிதத்தைஅப்படியே மேசையில் வைத்துவிட்டார். அந்தக்கடிதத்தில் ஒன்றும் எழுதப்படவில்லை. அதுஒரு வெறும் ஒற்றை! மறுகணம்பெர்சிக்னி மௌனமானர். மனங்குளிர்ந்து காணப்பட்டார்! மென்மையான சொற்களைப் பாவித்தார். நண்பருக்கு ஒரே ஆச்சரியம்.

நண்பரும் செயலாளரைக் கண்டு இவ்விடயமாக விசாரித்தார். அந்தச் செயலாளர் கூறியது இதுதான். என் எசமான் கோபத்தால் விளைகின்ற கொடுமைகளையும், நட்டங்களையும் நன்கறிந்துவிட்டார். ஆகையால் அவருக்குக் கோபம்வருகிறது என்று நான் கண்டவுடன், அவரிடம் ஒரு வெற்று ஒற்றை-ஒன்றும்எழுதாத ஒற்றைஅடங்கிய ஒருகடிதத்தைக் கொடுத்துவிட வேண்டும். இது அவர் கட்டளை! ஏனெனில் கோபம் ஒரு வெற்றுப் பொருள்என்பதை அவர் அறிகிறார். அந்நேரத்தில் ஏற்படும் இம்மாற்றுச் செயல் கோபத்தை மாற்றச்செய்கிறது. பொறுமையை ஏற்கச்செய்கிறது.

நல்லதொரு திட்டம்தான். ஆனால், இதேதிட்டத்தை எத்துணை ஏற்றமுடையதாக ஆக்கியிருக்கலாம். ஆம், அந்த வெற்றுக்காகிதத் துண்டுக்காக அந்தத்துண்டிலே நம் திருமறையின் திருஏடாம் விவிலியத்திலிருந்து சில வரிகளை எழுதியிருந்திருந்தால்! ஆகா! அருமையான திட்டமல்லவா? இந்நேரத்திற்கேற்ற இனிய பொருள்களாயில்லை விவிலியத்தில். இதோ, ஒன்றிரண்டு 'சாம்பிள்'கள். இதோ, யேசு வருகிறார். முழந்தாளிட்டுத் தம்சீடர்களின் காற்பாதங்களைக் கழுவுகிறார். ஏன், தம்மைக் காட்டிக்கொடுக்கப்போகும் ஒரு துரோகி'யின் காற்பாதத்தைக் கூடக் கழுவுகிறார். ஆம்!

முத்தமெனும் அன்பின் சின்னத்தைத் துரோகத்தின் — வஞ்சகத்தின் — சூதின் சின்னமாகமாற்றி— ஒரு முத்தத்தால் தம்மைத் தம் நண்பனே காட்டிக் கொடுத்தபோது கருணையே வடிவாகவிருந்த யேசுவின் இதயத்தை வெளியிடும் இன்பமான நிகழ்ச்சிக் கோர்வையில்லையா? இதோ!

அவரைக் காட்டிக்கொடுத்தவனே அவர்களுக்குக் கொடுத்திருந்த அடையாளமாவது: "நான் எவனை முத்தஞ் செய்வேனே அவன்தான். அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்றுசொல்லியிருந்தான்.

ஆகையால், உடனே அவன் யேசு நாதரிடத்தில்வந்து: "குருவே வாழ்க" வென்றுசொல்லி முத்தமிட்டான்.

யேசுநாதர் அவனைநோக்கி: "சிநேகிதனே ஏதுக்காக வந்திருக்கிறாய்?" என்றார். அப்போது அவர்கள் நெருங்கி [illegible] காங்களை நீட்டி, அவரைப் பிடித்தார்கள் (மத்தேயு 26: 48—50).

ஆமாம்; தம்மைக் காட்டிக்கொடுத்தவனை—தம் "நண்பன்"என்று அழைக்கிறார். முத்தத்தைத் துரோகத்தின் சின்னமாக்கியவனை நண்பன் என்கிறார். அன்புஎன்பதை அவனியிலே குழிதோண்டிப் புதைத்தவனை நண்பன்என்கிறார்! என்னே தன்னடக்கம் யேசுவுக்கு! கொடுமையிலும் கொடுமையைக்கண்டும் கொஞ்சமும் கோபம் வாராத நிலை! அப்படியென்றால் அன்பின் திருவுருவன்றோ அவர்? சந்தேகமில்லாமல். தம்மை விட்டுவிட்டு ஆபத்தில் ஓடிவிட்ட நண்பர்களின் பாதங்களைக் கழுவினவர் எப்படிப்பட்டவர்! இயம்பிடமுடியுமா? ஏன்?

தன்னடக்கம்என்றால் தன்னைத்தான் அடக்கிக்கொள்ளுதல். அதில் கோபத்தை அடக்குதல் அடங்கும்; உணவிலும், குடியிலும் மட்டாயிருத்தல் அதில் அடங்கும்; உணர்ச்சிகளைத் தடுத்தாட்கொள்வதும், அதில் அடங்கும்; ஏன், எல்லாவித சக்திகளையும் ஏற்றமுறையில் அடக்கிக்கொள்வதே அதற்குள் அடங்கும். ஆக: இவையனைத்துக்கும் ஓர் எடுத்துக்காட்டு, வழிகாட்டி நம்நாதராம் யேசுநாதரேயாவார். எடுத்துக்கூறியவர் மட்டுமல்லர் அவர். வாழ்ந்துகாட்டியவர்; வாழவைத்தவர். ஆம்:

வலதுகன்னத்தில் அடித்தால் இடதுகன்னத்தைத் திருப்பிக்காட்டச்சொன்னவர் தானே. சொன்னதுமட்டுமா? தம்மைத் தம் பகைவர்கள் மன்னிக்கவும், நண்பர்கள் கற்றூணில்கட்டி முகத்தில் உமிழ்ந்தபோதுகூடப் பொறுமையின் சின்னமாய், பொன்றாத குணக்குன்றாய் காட்சியளித்தவர் தானே! சொன்னது மட்டுமல்ல, செய்துகாட்டியவருமவும் அவரே. அவரைவிட்டு வேறுஎவரையும்தேடியலையவேண்டியதில்லையே. நமக்கு; தன்னடக்கத்துக்கு எடுத்துக்காட்டாவதற்கு. அவர் உண்டு, அவர் வாழ்க்கைசரிதை உண்டென்றால், நம் மறையுண்டு; மறையேடு விவிலியம் உண்டென்றால் வேறு என்ன தேவை நமக்கு—ஆக!

தம்மைத் தாமேஅடக்கித் தாணிவாழ் மக்களையே தம்முள்அடக்கி, தனிபொரு நன்மகனாக நாம் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழவேண்டுமாகில் நமக்கு நாமே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அவைகளுக்கடங்க நாம் நடக்கவேண்டும். வாழ்வாங்கு வாழ வழிகாட்டியாக வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய நம் வல்லான் யேசுவையே ஏற்றுக்கொள்தல் வேண்டும். அவரின் திருமறைஏடாம் விவிலியத்தை நாளும் வாசிக்க வேண்டும். கற்க வேண்டும். கற்றவழி நடக்கவேண்டும்.

### நன்றியறிந்த தோத்திரங்கள்

பரிசுத்த சதாசகாயமாதா, செபமாலை மாதா, சூசையப்பர், யூதாதேயு மற்றும் அர்ச்சியசிஸ்டவர்கள் மூலமாக 3வரம் கேட்டு யேசுவின் அனுக்கிரகத்தினல் அனுகூலமானதால் நேர்த்தியை பூர்த்தி செய்யும் பொருட்டு இதைப்பிரசுரிக்கிறேன்.

ச. மரியநாயகி

* * *

யேசுவின் திரு இருதயத்தின் இரக்கத்தாலும், சகல அர்ச்சியசிஷ்டர்களின் உதவியாலும் எங்கள் குடும்பத்திற்கு வந்த நோய், பிணிகள் நீங்கியதற்கு உமது இருதயத்திற்கு நன்றி செலுத்துகிறோம். இன்னும் நாங்கள் கேட்கும் மன்றாட்டுகள் அனுகூலமாவதற்கு உமது இருதயத்திடம் கேட்டுப் பெற்றுத் தந்தருளும்.

மாத்தளை உமது அடியான்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அவர்கள் கண்ட கடைசிக் காட்சி

## மரணத்தை வரவேற்ற வேதசாட்சி

### உகண்டா தேசத்தில் வேதத்திற்காக உயிர்துறந்த இல்லறத்தினருக்கு அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்பட்டது!

முதல் ஆபிரிக்க அர்ச்சியசிஷ்டர்களாக, சின்னப்ப பாப்பாண்டவரால் இவர்கள் அபிஷேகிக்கப்படுவதற்குப் பலகாரணங்கள் கோர்வையாக இருக்கின்றன. 78 வருடங்களுக்குமுன் நான்குஇளம் பெண்கள் வேலிக்குமேலால் அதிசயத்துடன் எட்டிப்பார்த்ததும், அவர்கள் தாம் கண்டவற்றைக் கூறியதும் இவ்வித காரணங்களுள் ஒன்று.

பார்த்த பெண்மணிகள் பரிதாபமான பரிசைப்பெற்றனர். இருவர் கரங்கள் துண்டிக்கப்பட்டன. அவர்கள் கண்கள் பிடுங்கப்பட்டன. 22 உகண்டாதேசத்து வேதசாட்சிகளுள் ஒருவரான அன்ட்றுக்குவா என்பவரின் மரணத்தையே அவர்கள் இறுதியாக தம் கண்களால் பார்த்தனர். 14 வயதுக்கும் 5[illegible] வயதுக்கும் இடைப்பட்ட எல்லா வேதசாட்சிகளின் அபிஷேகத்துக்கும் இப்பெண்மணிகள் சாட்சியமளித்தனர். கார்த்திகைமாதம் 1885-க்கும் மார்கழிமாதம் 1886-க்கும் இடையில் இவர்கள் கொல்லப்பட்டார்கள். உகண்டாதேசத்து முவாங்கா என்னும் அரசனின் ஆணைப்படி இது நடைபெற்றது. இவ்வரசன் சிங்காசனமேறியதும் நாடுகடத்தப்பட்ட வெள்ளைக் குருப்பிரசாதிகளை வரவழைத்துப் பிற்பாடு அவர்களுக்கு எதிராகத் திரும்பினான்.

### ஒழுக்கவீனம்

முவாங்கோ அரசன் இப்புதிய மதம் பதித சட்டங்களுக்குத் தன்னுடைய பிரசைகளை அமையவிடாதென உணர்ந்தான். மிகக் குறைவானவர்களே ஒழுக்கமற்ற நடத்தைகட்கு இணங்கித் தன்னுடைய அரண்மனைக்கு வருவதைக்கண்டான். தன்னுடைய தந்தை முடாஸா அரசன் தனது இராச்சியத்தைப் பிரான்ஸ் இடம் ஒப்படைப்பதற்கு வேண்டிய உதவிகளைக் குருக்கள் செய்யாததால் அவர்கள்மேல் இன்னும் கோபங்கொண்டான். இது தற்போது சுதந்திர உகண்டா பிரதேசம் ஆங்கில ஆட்சிக்குள் வருவதற்கு 10 ஆண்டுகட்குமுன் சம்பவித்தது.

பெண்மணிகள் சாட்சிபகரும் வேதசாட்சி அன்ட்று என்பவர் சிக்கோவாதேசத்துத் தலைவர். இவர் முதல் கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர். முவாங்கோ அரசனின் நண்பனும் ஐரோப்பிய மேளக்கூட்டங்களின் முதல்வனுமாக இவர் விளங்கினார்.

## விருந்தினர்

### இந்துக்களின் இல்லங்கள் கருதினல்மாரின் தங்குமிடங்கள்

— இந்தியா

பம்பாய்நகரில் நடக்கஇருக்கும் சற்பிரசாத மகாநாட்டிற்கு எல்லா மக்களும் உதவிஅளிக்க முன்வந்திருக்கிறார்கள். கருதினல்கள், அதிமேற்றிராணிமார்கள், மேற்றிராணிமார்கள் தங்குவதற்கு தங்களுடைய வீடுகளை இந்துசமய மக்கள் ஆயத்தம் செய்கிறார்கள்.

சற்பிரசாத மகாநாட்டின் பொழுது மூன்றுகோவில்கள், அபிஷேகம் செய்யப்படும். 5 கண்டங்களிலிருந்து ஐந்து மேற்றிராணிமார்கள் அபிஷேகம் செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது. 200 குருமார்களுக்குக் குருப்பட்டம் அளிக்கப் படும்.

### பிறகிறிஸ்தவ அவதானிகளுடன்

## பரிசுத்த பாப்பரசர் செபம் செய்தார்

வத்திக்கான் சங்கத்து இவ்வருட கூட்டங்களுக்கு பிற கிறிஸ்தவசபை அவதானிகளாக அங்குசென்றிருக்கும் 75 பேருக்குப் பரிசுத்த பாப்பரசர் சென்றவாரம் ஒரு விசேஷ பேட்டி அளித்தார். பேட்டியின் ஆரம்பத்தில் பாப்பரசர் அவர்கள் யாவருடனும் சேர்ந்து சகல கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமைக்காகச் செபித்துக்கொண்டார். பின்பு அவர்களுடன் உரையாடுகையில் அவர் கூறியதாவது: "ஒரு புதுமுறை ஆரம்பமாகியிருக்கிறது. ஒரு புதிய நெருங்கிய சிநேக உணர்ச்சியை நாம் யாவரும் உணருகின்றோம். ஒற்றுமை இயக்கம் மும்முரமடைந்துவருகின்றது. கத்தோலிக்கரைப் பொறுத்தவரையில் இவ்வியக்கத்தின் வெற்றிக்கு முட்டுக்கட்டையாய் இருக்கும் யாவற்றையும் அகற்றிவிட நாம் வழிமுறைகளைப் பரிசிலனை செய்துவருகின்றோம், தப்பெண்ணங்கள் களைந்து எறியப்படும். ஆனால், கிறிஸ்துநாதரின் போதனைகள் எவற்றிலும் மாற்றங்கள் செய்ய முடியாது. உங்கள் மத்தியில் இருக்கும் உண்மைகளுக்கும், பயபக்திக்கும் அவற்றுக்குரிய மதிப்பை அளித்து, ஒற்றுமை காண எம்மாலான வகைகள் யாவற்றையும் உபயோகிக்கத் தயாராக இருக்கின்றோம்."

### இந்திய அதிமேற்றிராணியாரின் வியப்பான யோசனை

## இல்லறத்தாருக்கு தூதர் போன்ற உயர் பதவிகள்

வத்திக்கான் சங்கத்தில் சென்றவாரம் திருச்சபையில் இல்லறத்தோரின் பங்கு என்பதுபற்றி பிதாக்கள் ஆலோசனை செய்கையில் இந்திய அதிமேற்றிராணியார் இயூஜின் டிசூசா அவர்கள் சகலருக்கும் வியப்புத்தரக்கூடிய சில யோசனைகளைக் கூறினார். இது காலவரையும் தகுந்தபல காரணங்களுக்காக இல்லற கத்தோலிக்கருக்கு உரிய பல தொண்டுகள் அவர்களுக்குக் கொடுக்கப்படாது இருந்திருப்பினும் அவ்வுரிமைகள் அவர்களுக்கு அளிக்க வேண்டிய காலம்வந்துவிட்டது என்றார். இல்லறத்தோர் பங்குபெறக்கூடிய பல தொண்டுகளையும் எடுத்துக் கூறுகையில் திருச்சபை ஆட்சியின் உயர் ஆலோசனைச்சபையாகிய "கியூறியா"வில் அவர்களிற் சிலர் அங்கம் வகிப்பதும், பாப்பரசரின் தூதர்களாக நியமனம் பெறுவதும் மிக விரும்பத்தக்கன என எடுத்துக் காட்டினார்.

## சங்கபிதாக்களின் வாக்கு

### கிறிஸ்தவசபை ஒற்றுமைக்கு அமோகமான உற்சாகம்

பிறகிறீஸ்தவ சபைகளுடன் ஒற்றுமைக்கு உழைப்பதுபற்றிய வாக்கெடுப்பு அகிலஉலக கத்தோலிக்கரைப் பெரிதும் உற்சாகப்படுத்துகின்றது. "இதுவே ஒரு பிரயாணத்தின் தொடக்கம். பல நூற்றாண்டுகளாக இருந்துவரும் வித்தியாசங்கள் ஒரு சில நாட்களில் மாயமாய் மறைந்துவிடுமென எவரும் எதிர்பார்க்கவில்லை. பிரயாணம் தொடர்ந்துமுடிவுபெறும்." —இவ்வாறு ஒற்றுமை இயக்கத்தைப் பற்றிக் கூறுகையில் றுவென் நகர அதிமேற்றிராணியார் மாட்டின் அவர்கள் கூறினார். ஒற்றுமை இயக்கத்துக்குச் சாதகமாகக் கிடைத்த வோட்டுகளைப்போல இதுவரை சாதகமாக ஒன்றுக்கும் கிடைக்கவில்லை. எட்டு வோட்டுகள் மாத்திரமே எதிராக இருந்தன.

இங்கிலாந்தில் சுரே என்னுமிடத்தில் 600 வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட சில கத்தோலிக்க சின்னங்கள் காப்பாற்றப்பட்டு வருகின்றன. இவற்றுள் ஏழுதலையான பாவங்களைக் குறிக்கும் ஏழு சிரசுகளின் சின்னம் குறிப்பிடத்தக்கது.

# மறுமலர்ச்சி

— உரோமை

"உலகில் உள்ள எல்லா இல்லறத்தவர்களின் நல்லுணர்ச்சிகளையும், சரித்திரத்தின் இம்முக்கிய கட்டத்திலே எடுத்துரைக்கின்றோம். இல்லறத்தில் வாழும் நாம், எமது கடமைகளை நன்று உணர்ந்திருக்கின்றோம்" ........ வத்திக்கான்சங்க அவைக்களத்தில் கேட்ட இவ்வார்த்தைகளைப் பற்கிகன் என்றவர் உணர்ச்சி ததும்ப எடுத்துக் கூறினார். இவர்தான் பொதுச்சங்கத்தில் சொற்பொழிவாற்றிய முதலாவது இல்லறத்தவர். ஆங்கிலேயர்—உலக இயக்க கிறீஸ்தவ தொழிலாளிகளின் தனிப்பெரும் தலைவர். "கடவுளுடைய மக்கள் எல்லோரும், சமயதொண்டு ஆற்றவேண்டிய கடமை உள்ளவர்கள் ஆனால், ஒரு சிலரே அதை உணர்ந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பது மறுக்கமுடியாதது......கத்தோலிக்க மக்கள் தங்கள் பொறுப்பை உணரச்செய்ய வேண்டும். நாம் வாழும் உலகத்தின் தேவைகளை, நமது ஆயர்களுக்கு அறிவிப்பது உலகத்துடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள இல்லறத்தவர்களாகிய எமது கடமை; அத்தேவைகளை நிவிர்த்தி செய்வதற்கும் குருக்களுடைய புத்திமதிகளைப் பெறுவது அவசியம்"......பேச்சு முடிந்து அவர் தம்முடைய இடத்திற்குப் போனபொழுது மூன்று கருதினல்கள் அவருக்குக் கை கொடுத்துப் பாராட்டினார்கள்.—

"இல்லறத்தவர்கள் குழந்தைகளைப்போல அல்ல, வயதுவந்தவர்களைப்போலக் கணிக்கப்படவேண்டும். கடவுளின் மக்கள் சர்வாதிகார நாட்டினர் அல்ல"......என்று இந்திய அதிமேற்றிராணியார் டிசூசா பொதுக்கூட்டத்தில் கூறினார். சில நூற்றாண்டுகளுக்கு முன், கல்வியில் தேர்ந்திருந்தவர்கள், ...ஒரு சில இல்லறத்தவரைத்தவிர குருக்களும், சந்நியாசிகளும்தான் காலக்கணக்காக, திருச்சபை நிர்வாகத்தில் இல்லறத்தார் முக்கியஇடம் பெறாததற்கு இது காரணமாக இருந்திருக்கலாம்......ஆனால் இன்று இல்லறத்தார்கள் குருக்களுக்குத் தமது உதவியைக் கொடுத்துதவ வேண்டும்" என்று —ஹீனன் ஆண்டகை தெரிவித்தார். ஒஸ்திறியாவின் கேனிக் ஆண்டகை கூறுகிறார்..... அருளப்ப தந்தை பொதுச்சங்கத்தைப்பற்றி அறிவித்தவுடன், "நான் எல்லோரையும் — பெண்கள், ஆண்கள், கைத்தொழில் வேலையாளர்—பத்திரிகை எழுத்தாளர்—எல்லோரையும் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும்படி அழைத்தேன். அவர்கள் கூறியவைகளைப் பற்றிநன்றாகச் சிந்தித்தேன். அதன் பின்புதான் சங்கத்திற்கு என்னுடைய கருத்துக்களைச் சமர்ப்பித்தேன்......" ...திருச்சபை வரலாற்றில் இது இல்லறத்தோரின் பொற்காலமே.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 24-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org